நாள் 11.09.2025

சி.சி. 97/2018

அசா 13 - பார்வதி

க/பெ.பன்னீன்செல்வம்

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of September 2025.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1. வாதி கொடுத்த புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 19.08.2016 சம்பவம் நடந்த நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதற்கு முன்பு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் வாதி தான் எத்தனை மாதம் கர்ப்பமாக உள்ளார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி வாதியுடன் எந்த தேதியில் உடலுறவு வைத்துக்கொண்டார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

2. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி பேருந்து நிறுத்ததில் நின்றுகொண்டிருந்தபோது வாதியின் தம்பி அவரை அடையாளம் காட்டினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் அடைப்பு அறிக்கையில் எதிரினை வாதியின் சித்தப்பா செல்வராஜ் என்பவர் அடையாளம் காட்டினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா 6 செல்வராஜ் என்னுடைய விசாரணையின்போது எதிரியும் வாதியும் பழகி வந்தார்கள் என்ற விபரம் தனக்கு தெரியும் என்று கூறவில்லை என்றால் சரியல்ல, எனது விசாரணையில் கூறியுள்ளார்.

3. கடந்த 19.08.2016 அன்றுதான் வாதியை விசாரணை செய்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். கடந்த 27.03.2016 அன்று எதிரி வாதியுடன் உடலுறவு கொண்டார் என்ற விபரத்தை வாதியின் புகார்., முதல் தகவ்ல அறிக்கை மற்றும் காவல் அடைப்பு அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். புகாரில் எதிரி வாதியின் பக்கத்து வீட்டில் வசித்து வந்தார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4. மாதிரி வரைபடத்தில் எதிரியின்வீடு குறிப்பிட்டு சுட்டிக்காட்டவில்லை என்றால் சரிதான், எதிரியின் வீடு சம்பவம் நடந்த இடத்தின் அருகில் இல்லை அதனால்

குறிப்பிடவில்லை, அவருடைய வீடு அந்த தெருவில் கடைசியில் அமைந்துள்ளது. எனது விசாரணையின்போது எதிரியிடம் அசா 2 , அசா 1க்கு நடந்த கொடுமை பற்றி கேட்டபோது நீ எந்த நீதிமன்றம் வேண்டுமானாலும் செல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையின்போது எதிரி தனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்று அசா 2 கூறவில்லை என்றால் சரியல்ல.

5. கடந்த 14.08.2017 அன்று எதிரிக்கு ஆண்மையில்லை என்று கூறுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று அசா11 கருத்துரை வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அசா 6 என்னுடைய விசாரணையின்போது தான் எதிரியை சந்தித்து பேசியதாகவும் அப்போது எதிரி ஆடி மாதம் கழித்து வாதியை திருமணம் செய்துகொள்வதாக என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். அசா 3 என்னுடைய விசாரணையின்போது வாதி கர்ப்பம் தரித்த பிறகு தானும் தனது கணவரும் எதிரியை சந்தித்தாகவும் தங்களது மகளை திருமணம் செய்துகொள்ளுங்கள் என்று கேட்டபோது கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறவில்லை என்றால் சரிதான்.

6. அசா 11 மருத்துவரை நான் எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்றால் 30.08.2016 அன்று விசாரணை செய்தேன். வழக்கு ஆவணங்களான ஒப்புதல் வாக்குமூலம், மாதிரி வரைபடம் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையான வாக்குமூலங்கள் அனைத்தும் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றும் எதிரிக்கு எதிராக தவறான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.